**சுருக்கம்**

கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் 20 ஏக்கர் நிலத்தை, JnNURM (BSUP) திட்டத்தின் கீழ் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்க – நகராட்சி நிர்வாக ஆணையருக்கு–அனுமதி அளித்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2) துறை**

அரசாணை (நிலை) எண்.96

நாள் 11.08.2014
திருவள்ளுவர் ஆண்டு – 2045
ஜய ஆடி மாதம் – 26
படிக்கப்பட்டது :

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண் 19182/2014/மாநஅ3,
நாள் 05.07.2014.

************

**ஆணை:–**

மேலே படிக்கப்பட்டுள்ள கடிதத்தில், நகராட்சி நிர்வாக ஆணையர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால், JnNURM (BSUP) திட்டத்தின் கீழ் 9600 குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டத்தில், 3,760 குடியிருப்பு கட்டிடங்கள் கட்டுவதற்கான பணி மட்டுமே நடைபெறுவதாகவும், மீதமுள்ள குடியிருப்புகள் கட்ட வெள்ளலூர் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 20 ஏக்கர் நிலத்தை வழங்குமாறு தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய நிர்வாக இயக்குநர் கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார். அவர் மேலும், கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றம் தீர்மான எண் 1, நாள் 30.01.2014–ல் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் அமைந்துள்ள 650 ஏக்கர் நிலத்தில், 20 ஏக்கர் நிலத்தை அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு அரசின் அனுமதியுடன் வழங்கலாம் என சிறப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட 20 ஏக்கர் இடத்திற்காக கண்டறியப்பட்ட புல எண்களின் விவரம்

| வ. எண் | சர்வே எண். | மொத்த பரப்பு ஹெக்டேரில் | தேவைப்படும் இடத்தின் பரப்பு ஹெக்டேரில் |
|---|---|---|---|
| 1 | 608/1 பாகம் | 1.14.50 | 0.74.88 |
| 2 | 608/2 பாகம் | 1.05.50 | 1.05.50 |
| 3 | 620/எ–3,4,5,6 | 1.47.00 | 1.47.00 |
| 4 | 621/1,2,3,4,5 | 1.37.00 | 1.37.00 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 622/1,2,3,4 | 2.52.50 | 2.52.50 |
| 6 | 623எ | 0.92.50 | 0.92.50 |
| | | **மொத்தம்** | **8.09.38 ஹெக்டேர்**<br>**(அல்லது)**<br>**20 ஏக்கர்** |

3. நகராட்சி நிர்வாக ஆணையர் மேலும், கோயம்புத்தூர் மாநகராட்சி வெள்ளலூர் கிராமத்தில், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவுநீர் பண்ணை அமைக்க 650 ஏக்கர் நிலம், நில ஆர்ஜிதம் மூலம் பெறப்பட்டு, மாநகராட்சியின் பொறுப்பில் உள்ளது என்றும், நில எடுப்பு சட்டம் 1894 பிரிவு 16எ–ன்படி ஒரு பயன்பாட்டிற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்தினை வேறு துறைக்கு வழங்குவதற்கு அரசின் அனுமதி பெற வேண்டும் என்று தெரிவித்து, அதனடிப்படையில் மேற்கண்ட நிலத்தை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்க அரசின் அனுமதியை பெறுவதற்கு கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றம் தனது 11.06.2014ம் நாளிட்ட தீர்மான எண்.20–ல், தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்றும் தெரிவித்து, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான மேற்படி 20 ஏக்கர் நிலத்தினை, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்கும் செயற்குறிப்பின் மீது உரிய ஆணை பிறப்பிக்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்கண்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தபின், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் அமைந்துள்ள 650 ஏக்கர் நிலத்தில், 20 ஏக்கர் நிலத்தை, JnNURM (BSUP) திட்டத்தின் கீழ் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு ஏதுவாக, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. பணீந்திர ரெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**<u>பெறுநர்</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 600 005
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை 600 005
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி. கோயம்புத்தூர்
மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூர்

**<u>நகல்</u>**

மாண்புமிகு அமைச்சர் (ந.நி., ஊ.வ. சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்), அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின்

தனிச்செயலாளர், சென்னை – 600 009
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2)துறை, சென்னை– 600 009
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**பிரிவு அலுவலர்.**